கண்ணோட்டம்



கலை

# கலையின் காட்டில் மழை


**இந்திரன்**

(கலை விமர்சகர்)


கூட்டிக் கழித்துப் பார்க்கிறேன். 1996-ல் தமிழகத்து ஓவிய/சிற்பக் கலைகளின் காட்டில் நல்ல மழை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

"நவீன கலையா? அது நமக்குப் புரியாது சாமி". என்று சொல்கிற காலம் மலையேறி விட்டது. பிரபல வார, மாத இதழ்கள்கூட நவீன ஓவியங்களை வெளியிடத் தொடங்கி விட்டன.

தமிழை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று முத்தமிழாகப் பிரித்து வளர்த்தவர்கள், ஓவிய/சிற்பக் கலைகளை ஏன் மறந்து போனார்கள்? வங்காளத்தில் கலை இயக்கம் ஒன்று தனித்துவமான பண்புகளுடன் தோன்றி வளர்ந்தது போல, தமிழ்நாட்டில் மாபெரும் ஓவிய இயக்கம் ஒன்று ஏன் தோன்றவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடும்போது கிடைக்கும் முக்கிய பதில், தமிழகத்து ஓவிய/சிற்பிகளுக்குள் (தொழில் முறை போட்டி, பொறாமை தவிர்த்த) சரியான கருத்துப் பரிமாறல் இல்லை. நவீன ஓவியப் படைப்புகள் குறித்து உடனடி விமர்சனங்கள் இல்லை. ஓவியர்கள் தங்கள் படைப்புகளை மக்களிடம் நேரிடையாகக் கொண்டு செல்லவில்லை. தற்கால கலைப் படைப்புகளில் இந்த மண்ணின் அடையாளங்கள் இல்லை. இந்த விமர்சனங்களுக்கு 1996 நல்ல பதில்களைச் சொல்லி இருக்கிறது.

ஜனவரி மாதத்திலேயே ஓவியர்கள் தங்கள் படைப்புகளை நேரிடையாக மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சியில் இறங்கி விட்டனர். 'ஆர்ட் ஓ அசெம்ப்ளேஜ்' என்ற பெயரில் ஆறு ஓவியர்கள் சென்னை லலித்கலா அகாடமியில் பதினைந்து நாள் விழா நடத்தினார்கள். பிரபல ஓவியர் கே.எம்.ஆதிமூலம் திறந்து வைத்த

> "நவீன கலையா? அது நமக்குப் புரியாது சாமி" என்று சொல்கிற காலம் மலையேறி விட்டது.

கண்காட்சியில் பொதுமக்களின் எதிரிலேயே ஓவியங்களைப் படைத்தார்கள். பிரபல கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருடன் ஓவியர்கள் பலர் ஐந்து நாள் மனம் திறந்து பேசினார்கள். இந்த அபூர்வ நிகழ்ச்சியை சாதித்ததற்காக ஓவியர்கள் விஸ்வம், வீரபாண்டியன், நெடுஞ்செழியன், நெல்சன் கென்னடி, ஆர்.ஜனார்த்தனன், ஆர்.சீனிவாசன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சென்ற ஆண்டில் ஓவியர்கள், இலக்கியவாதிகள், பொதுமக்கள் ஆகியோருக்கிடையே ஆரோக்கியமான பேச்சு வார்த்தைகள், கருத்தரங்குகள், ஓவியர் சந்திப்புகள், கண்காட்சிகள் என்று பல நிகழ்ச்சிகள் நடந்தன. ஜெர்மனியைச் சேர்ந்த ஃப்ரான்க் பிரைடன் புரூச் சென்னையின் இளந்தலைமுறை சிற்பி எஸ்.சுவாமிநாதனுடன் இணைந்து 'கோவாடிஸ்' (எங்கே போகிறாய்?) என்கிற தத்துவத் தேடல் கொண்ட ஒரு கண்காட்சியை நிகழ்த்தினார்.

மும்பையில் வாழும் ஓவியர் விஜி நாகேஸ்வரன் எனும் பெண்மணி சென்னையில் வந்து ஒரு 'ஆர்ட் காலரி'யைத் திறக்கிறார் என்று சொன்னால் சென்னையில் கலை இயக்கம் சூடுபிடித்துவிட்டதை அவர் உணர்ந்து கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

1996ஆம் ஆண்டின் மிக முக்கியமான கருத்தரங்கமாக 'நவீன கலையும் பிரதேச அடையாளமும்' எனும் கருத்தரங்கத்தைக் குறிப்பிட வேண்டும். லலித்கலா அகாடமியின் சார்பில், கேரளா, ஆந்திரா, சென்னை ஆகியவற்றைச் சேர்ந்த லஷ்மா கௌட், விஜயகுமார் மேனன், கே.வி. ஹரிதாசன், லக்ஷ்மி வெங்கட்ராமன், கீதா டாக்டர் ஆகியோருடன் நானும் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரை வாசித்தேன். ஓவியமும், சிற்பமும் மொழி எல்லைகளைக் கடந்தவை. சர்வதேச மொழியான வண்ணங்களையும், கோடுகளையும் வார்த்தைகளாகக் கொண்டு பேசுபவை. இதில் பிரதேச, இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களைத் தேடுவது தவறு என்று நம்புகிற ஓவியர்களும், சிற்பிகளும் நம்மிடையே இன்றும் இருக்கிறார்கள். ஆனால் இவர்களே சீன ஓவியம், கோத்திக் கட்டிடக் கலை, கிரேக்க சிற்பம் என்று பேசுகிறபோது வாய்மூடி இருக்கிறார்கள். இத்தகைய காலகட்டத்தில்தான் 'நவீன கலையும், தமிழ் அழகியலும்' எனும் கட்டு



ஸரையை கருத்தரங்கில் சமர்ப்பித்தேன்.

சென்ற ஆண்டின் மற்றொரு கலை சாதனையை சென்னை வேல்யூஸ் ஆர்ட் ஃபௌண்டேஷன் இயக்குநர் திருமதி மகேஷ் நிகழ்த்திக் காட்டினார். தமிழகத்தின் எழுபத்திரெண்டு ஓவியர்கள் பங்குகொண்ட 'மதராஸ் -ஓர் உணர்வெழுச்சி' எனும் மாபெரும் கண்காட்சியை எந்தவித அரசு ஆதரவும் இன்றி நடத்திக் காட்டினார். இதில் ஓவியர் இராம. பழனியப்பனின் வடிவமைப்பில் உயர்ந்த தரத்திலான கையேடு ஒன்று மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டது.

1996 குறிப்பிடத் தகுந்த ஒரு ஆண்டாக தமிழகத்து கலை வரலாற்றில் இடம் பெறும் என்றே சொல்லலாம். காரணம்: 'கலை - விடுதலைக் குப்பின்' எனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்காட்சி. 1948-லிருந்து 1970 வரையிலான தமிழகத்து ஓவியர்களின் பழம்பெரும் படைப்புகளைத் தேடித் தொகுத்து இரண்டு நிலைகளாக இக்கண்காட்சி நடத்தப்பட்டது. முதல் நிலையாக வேல்யூஸ் ஆர்ட் காலரியிலும், இரண்டாம் நிலையாக சென்னை அருங்காட்சியகத்திலும் படைப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இந்திய விடுதலையின் பொன்விழா ஆண்டைக் கொண்டாடும் விதமாக அமைந்திருந்த இக்கண்காட்சியில்



நான் எழுதிய 'தற்கால கலை-அகமும், புறமும்' எனும் நூலினை தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் வை.பழனிச்சாமி ஐ.ஏ.எஸ். வெளியிட்டார். ஒரே கூரையின் கீழ் ஒரு காலகட்டத்தின் மொத்த படைப்புகளையும் ஒரு சேரப் பார்க்கிறபோதுதான் சென்னை ஓவிய முன்னோடிகளின் படைப்புகளை மீறி தற்கால ஓவியர்கள் அதிகம் சாதித்து விடவில்லை என்பது புரிய வருகிறது.

ஆனாலும் மனதில் ஒரு ஏக்கம். ஏன் பெரும்பாலான கலை நிகழ்வுகள் தமிழகத்தின் தலைநகரமான சென்னையிலேயே மையம் கொண்டு விடுகின்றன? தமிழகத்து ஓவிய இயக்கம் சென்னை தாம்பரத்தைத் தாண்டி போக மாட்டேனென்கிறதே. கலை முயற்சிகள் என்றைக்கு மாவட்டம்தோறும் காட்டுத் தீயாய் குமரிமுனை வரை பரவுகிறதோ அன்றுதான் உண்மையான கலை எழுச்சி தமிழகத்தில் தோன்றும். இதற்கு மதுரையின் ஓவியர்களான கே.சி.முருகேசன், எம்.ஜி.ரஃபீக் அகமது, கோயமுத்தூரின் ஓவியர் ஜீவா, புஷ்பராஜ், நெய்வேலியின் ஓவியர்கள் கோவிந்தன், செல்லப்பன், பூம்புகாரின் சூரியமூர்த்தி, பாண்டிச்சேரியின் சிற்பி ஜெயராமன், மாணிக்கம், திருநெல்வேலியின் தூரிகை அமைப்பு, சேலத்தின் ஓவிய எழுத்தாளர் மன்றம் ஆகிய சக்திகளின் முயற்சிகள் தீவிரப்பட வேண்டும்.

கடந்து போன வருடம் தமிழ் நவீன கலைக்கு நிறைய நம்பிக்கையின் விதைகளைத் தூவிச் சென்றிருக்கிறது. இதனால்தான் சொல்ல முடிகிறது, தமிழகத்தில் 1996-ல் ஓவிய, சிற்பக் கலைகளின் காட்டில் மழை என்று.